ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

16.07.2026

1. வேலவனே அரங்கன் என்னை
வையகம் காக்கும் சேவைக்கு
கோலமதாய் அவதாரம் நிகழ்த்தி
குறைவிலா தருமசாலை அமைத்தருள

2. அருளவே பிரணவக் குடிலெனும்
ஆறுமுகன் தங்கி அருள் செய்யும்
தருமசாலையை நடத்தி யானும்
தரணிக்கே தரும சேவை வழிகாட்டி

3. வழிகாட்டி அற்புதம் நடத்தி
வடிவேலனார் ஜோதி கலந்து
அழியாமை ஞானம் மக்களுக்கருளவே
அருட்சுவடி வழி குருவார அருளாசி தன்னை

4. தன்னையே பராபவ மிதுன திங்கள்
தக்க பஞ்ச கடை குருவார ஆசியாக
இன்னாளில் அரங்கனும் உரைப்பேன்
என் பீடம் நோக்கி மக்கள் வந்து

5. வந்துமே அருளமுதை உண்டு
வல்லமையான ஞான உபதேசம்
சிந்தைதனில் அரங்கா என ஏற்று
சீடர் ராம்குமார் கரம்பட தருகின்ற

6. தருகின்ற மகா சூட்சும தீட்சைகளை
தரணியோர் ஏற்றுப் பணிந்து
வருமுலகில் தொடர் செபதபம் காண
வளமே வாழ்வில் வந்தடையும்

7. அடைவதுடன் ஆத்ம ஞானபலம்
ஆபத்தை வெல்லும் தேகமனபலம்
தடையின்றி ஞான வழி வரும்
தவசிகளின் அருள்பலமும் கூடி சிறப்பர்

8. சிறப்பான பூசைபல செய்தாலும்
சித்திகள் தன்னை அடைய

மறுக்கா ஜீவத் தயவெனும்
மனதுள் தரும சிந்தை வேண்டும்

9. வேண்டி வளர்க்கும் அரங்கனென்
விடாது நடத்தும் அன்னதானத்தில்
உண்டான பொருளுதவி செய்து
உடல் உழைப்பும் தந்து வர

10. வரவர உங்களுள் மாற்றம்
வரமாக அரங்கன் யான் தர
அறமோடு வாழும் வாழ்க்கையாக
ஆறுமுகன் அரங்கனென் துணை

11. துணை இருக்க பிறவி அறுக்கும்
தூய ஞான வாழ்வுமாக
இணையிலா தரும ஞானவாழ்வாக
எங்களோடு ஈதூழே கலக்க நேரும்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி